# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 356 | 4 Pages | 18.7.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 356 | 4 பக்கங்கள் | 18.7.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## தெற்கு, மத்திய காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பேர் பலி



இஸ்ரேல், \ஜுலை 18

இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் நிறுத்தத்திற்கான பேச்சு வார்த்தை ஒருபக்கம் நடைபெற்று கொண்டிருக்கும் நிலையில் மறுபக்கம் காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் இன்று அதிகாலை வரை மத்திய காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர்.

நுசெய்ரத் மற்றும் ஜவைடா ஆகிய இரண்டு இடங்களில் நடத்திய தாக்குதலில் 10 பெண்கள் மற்றும் நான்கு குழந்தைகள் உள்பட 24 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த வாரம் இஸ்ரேல் மீது அக்டோபர் 7ந்தேதி தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ராணுவ தலைவர் முகமது தெய்ஃப்ஐ குறிவைத்து தாக்குதல் நடத்தியில் 70க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதற்கு பின்னரும் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கான பரிந்துரையை வழங்க ஹமாஸ் அமைப்பினர் சம்மதம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் மத்திய காசா மீது இஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தியுள்ளது. காசா மீதான கொடூர தாக்குதலை முடிவுக்கு கொண்டு வரவும், ஹமாஸ் அமைப்பிடம் சிக்கியுள்ள 120 பிணைக்கைதிகளை விடுவிக்கவும் சர்வதேச மத்தஸ்தர்கள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த தாக்குதல் மக்கள் வசித்து வந்த நான்கு வீடுகள் மீது நடத்தப்பட்டதாக அவசர பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய காசாவில் பயங்கரவாதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. மேற்கொண்டு விரிவாக இந்த தாக்குதல் குறித்து ஏதும் தெரிவிக்கவில்லை.

தெற்கு காசாவில் திங்கட்கிழமை (நேற்று) இரவு இரண்டு இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

................................

## டிரோன் கேமரா மூலம் அம்பலமான தகாத உறவு

சீனா, ஜூலை 18

சீனாவில் ஹூபே மாகாணத்தில் உள்ள சியான் நகரை சேர்ந்தவர் ஜிங் (வயது33). இவர் தனது மனைவியின் நடத்தை மீது சந்தேகப்பட்டார். இதனால் மனைவியின் செயல்பாடுகளை கண்காணிக்க தொடங்கினார்.

அப்போது தனது மனைவிக்கும், வேறு ஒரு நபருக்கும் தொடர்பு இருப்பதை கண்டுபிடிக்க திட்டமிட்ட ஜிங் இதற்காக டிரோன் கேமராவை பயன்படுத்த ஆரம்பித்தார். காரில் அவரது மனைவி வேறு ஒரு ஆணுடன் மலைப்பகுதிக்கு கைகளை பிடித்து கொண்டு ஒரு சிறிய குடிசைக்குள் நுழைந்து 20 நிமிடங்கள் கழித்து அங்கிருந்து வெளியே வந்து அலுவலகம் செல்லும் காட்சிகள் டிரோன் கேமரா மூலம் அம்பலமானது.

இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த ஜிங் விசாரணை நடத்தினார். அவரது மனைவி அவரது நிறுவன உரிமையாளருடன் தகாத உறவு இருந்ததும், அவர் தன்னை ஏமாற்றுவதையும் ஜிங் கண்டுபிடித்தார். டிரோன் வீடியோ ஆதாரத்தின் அடிப்படையில் மனைவியை விவாகரத்து செய்ய ஜிங் முடிவு செய்துள்ளார்.

................................

## ஓமனில் மசூதி அருகே துப்பாக்கி சூடு 4 பேர் பலி




ஓமன்,ஜூலை 18

ஓமன் நாட்டு தலைநகர் மஸ்கட்டின் வாடிகபீர் பகுதியில் உள்ள மசூதி அருகே துப்பாக்கி சூடு நடந்தது. இதில் 4 பேர் பலியானார்கள். பலர் காயம் அடைந்தனர். உடனே சம்பவ இடத்துக்கு போலீசார் விரைந்து வந்து காயம் அடைந்தவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும், சாட்சியங்களை சேகரிப்பதற்கான நடைமுறைகள், விசாரணைகள் நடந்து வருவதாகவும் போலீசார் தெரிவித்தனர். இந்த தாக்குதலை நடத்தியது யார்? என போலீசார் தெரிவிக்கவில்லை.

................................

## மனைவி உட்பட 42 பெண்களை கொலை செய்த சைக்கோ கொலையாளி கைது



கென்யா, ஜூலை 18

கென்யாவில் மனைவி உட்பட 42 பெண்களை கொடூரமாகக் கொன்று புதைத்ததாக ஜோமைசி கலிசியா (33) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைவிடப்பட்ட குவாரியில் உள்ள குப்பைக் கிடங்கில் இருந்து தொடர்ச்சியாக பல சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது கென்யாவில் பெரும் அதிர்ச்சியையே ஏற்படுத்தியுள்ளது.

இந்த குவாரிக்கு அருகில் இருந்த குற்றவாளியின் வீட்டை சோதனை செய்ததில், 10 செல்போன்கள், மடிக்கணினி, அடையாள அட்டைகள் மற்றும் பெண்களின் ஆடைகள், கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் உடல்களை அப்புறப்படுத்த உபயோகித்த 9 சாக்குகளை போலீசார் கைப்பற்றினர்.

தனது மனைவியின் கொலை தொடங்கி அடுத்ததாக 42 பெண்களை கொன்று அவர்களின் உடல்களை கைவிடப்பட்ட குவாரியில் அப்புறப்படுத்தியதாக கைது செய்யப்பட்ட ஒப்பு கொண்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக போலீசார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறந்த கைவினைஞர்களுக்கு விருது முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



சென்னை, ஜூலை 18

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட 8 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி கவுரவித்தார்.

'2022, 23ஆம் ஆண்டிற்கான "வாழும் கைவினைப் பொக்கிஷம்" விருதுகளை காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ந. பாலகிருஷ்ணன் மற்றும் கே.பி. உமாபதி (பித்தளை கலைப்பொருட் கள்), சா. ராஜகோபால் (சுடு களிமண்), ந.மணி ஆச்சாரி (கற்சிற்பம்), சி. முத்துசுவாமி ஆச்சாரி (கோவில் நகைகள்), சு. கோவிந்தராஜ் (இசைக் கருவி), ப. சுலைகாள் பீவி (கோரைப் பாய் நெசவு) செ. தங்க ஜோதி (இயற்கை நார்பொருட்கள்) ஆகிய 8 விருதாளர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்கான தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கினார்.

"2022, 23ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகளை சி. ரவி ச. நாகலெட்சுமி, மா. ராஜப்பா (தஞ்சாவூர் ஓவியம்), ம. முருகேசன் (இசைக்கருவி), ரா. லோகநாதன் (தஞ்சாவூர் கலைத்தட்டு), ந. பூவம்மாள் (சித்திரத் தையல்), ப. வரதன் (கற்சிற்பம்), மு. ராஜரத்தினம் மற்றும் ரா. சக்திவேல் (மரச்சிற்பம்), செ. லில்லி மேரி (மூங்கில் பாய் ஓவியம்) ஆகிய 10 விருதாளர்களுக்கு முதலமைச்சர் பூம்புகார் மாநில விருதிற்கான தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோ லை, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோபாலபுரத்தில் குத்துச்சண்டை பயிற்சி மைய கட்டிடம்: உதயநிதி ஸ்டாலின் ஆய்வு



சென்னை, ஜூலை 18

சென்னையில் உலகத் தரம் வாய்ந்த மைதானங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்து வதன் மூலம் சென்னையை உலக அளவிலான விளையாட்டு நகரமாக நிறுவி, உலகளாவிய போட்டிகளுக்கு சிறந்த இடமாகவும் விளையாட்டு வீரர்களுக்கு உயர் செயல்திறன் பயிற்சி மையமாகவும் உருவாக்க திட்டமிடப்பட்டது. அந்த கையில் கோபாலபுரத்தில் ரூ. 7.79 கோடி மதிப்பீட்டில் குத்துச்சண்டை பயிற்சி மையம் கட்டப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி மையத்தின் கட்டிட பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் இருக்கும் 234 சட்டமன்றத் தொகுதிகளில், அரசு ஏற்கனவே 61 தொகுதிகளில் பல்வகையான விளையாட்டரங்கங்களை அமைத்துள்ளது.

அவ்விளையாட்டரங்கில் தடகளம், கால்பந்து, கூடைப்பந்து, கையுந்துபந்து, கபாடி மற்றும் அந்தந்த பகுதிகளில் உள்ள பிரபலமான விளையாட்டுகள் உட்பட குறைந்த பட்சம் ஐந்து முக்கிய விளையாட்டுக்களுக்கான மைதான வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் தொகுதிகளில் விளையாட்டு கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் மீதமுள்ள சட்டமன்றத் தொகுதிகளில் அளவில் சிறு விளையாட்டரங்கம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கம் கட்டட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் ந. எழிலன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## இடைநிலை ஆசிரியர் பணி: கூடுதலாக 1,000 இடங்கள் சேர்ப்பு



சென்னை, ஜூலை 18

இடைநிலை ஆசிரியர் பணிக்கான நேரடி நியமனம் தொடர்பான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டு இருந்தது. இந்த காலி பணியிடங்களுக்கு போட்டித் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். அந்த வகையில் முதலில் 1,768 காலியிடங்கள் இருப்பதாக அறிவிப்பு வெளியான நிலையில், தற்போது கூடுதலாக இடங்களை அதிகரித்து ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

20232024ம் கல்வி ஆண்டுக்காக 1,768 இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு கடந்த பிப்ரவரி 9ந்தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதைத்தொடர்ந்து, இடைநிலை ஆசிரியர் பதவியில் கூடுதலாக 1,000 காலிப்பணியிடங்களைநிரப்புவதற்கான சேர்க்கை அறிவிக்கை www.trb.tn.gov.in என்ற ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இடைநிலை ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வு வருகிற 21ந்தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்வை 26 ஆயிரத்து 510 பேர் எழுத இருக்கின்றனர்.

## சுதந்திரப் போராட்ட தியாகி தீரன் சின்னமலையின் போர்படை தளபதி மாவீரன் பொல்லான் 219வது நினைவு நாள் வீர வணக்கம்



திருப்பூர், ஜூலை 17

சுதந்திரப் போராட்ட தியாகி தீரன் சின்னமலையின் போர்படை தளபதி மாவீரன் பொல்லான் அய்யா 219 ஆவது நினைவு நாள் வீரவணக்கம் செலுத்தப்பட்டது நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய தமிழ் புலிகளின் மேற்கு மண்டல செயலாளர் ஒண்டிவீரன் தமிழ்நாடு ஆதிதிராவமற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அய்யாவின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர் இதில் தமிழ் புலிகளின் ஒன்றிய பொருளாளர் கன்னியப்பன் மற்றும் மணி திருப்பூர் மாவட்டம் திமுக வழக்கறிஞர் அமைப்பாளர் வழக்கறிஞர் செல்வராஜ் அவைத்தலைவர் கதிரவன் அரசு வழக்கறிஞர் உதயச்சந்திரன் வழக்கறிஞர் விஜயகுமார் நகரதுணை செயலாளர் செலின் பிலோமினா மாவட்ட தொண்டனை அமைப்பாளர் சாகுல் ஹமீத் திராவிட கழக தொழிலாளர் அணி மணி நகரச் செயலாளர் முத்தரசு நகரத் தலைவர் சின்ன பதாஸ் பகுத்தறிவு கழகம் மாவட்டச் செயலாளர் ஓவியர் முருகேஷ் துணை அமைப்பாளர் கவிராஜ் மாவட்ட மகளிர் தொண்டர் அணி சசிகலா தலைமுத்து மாவட்ட மீனவ சங்கத் தலைவர் தில்லை முத்து சமூக சேவகரும் நகர கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் மற்றும் தாராபுரம் கோட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் கண்காணிப்பு குழு உறுப்பினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# உதவித்தொகை கோரி சேலம் கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் போராட்டம்



சேலம், ஜூலை 18

மாற்றுத்திறனாளிகளுக்கு வருவாய்துறையின் மூலமாக வழங்கப்படும் உதவித்தொகை ரூ.1500 மற்றும் கடும் மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி துறை மூலமாக வழங்கக்கூடிய உதவிக்காக ரூ.2000 கேட்டு விண்ணப்பித்து பயனாளிகளை தேர்வு செய்து ஓராண்டுக்கு மேலாகியும் ஆயிரக்கணக்கான பேருக்கு இது வரை வழங்கப்படவில்லை.

மாவட்டம் முழுவதும் மாற்றித்திறனாளிகள் உதவி தொகை கேட்டு விண்ணப்பம் செய்ய செல்லும்போது சர்வர் வேலை செய்யவில்லை என காரணங்களை சொல்லி திருப்பி அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

இதனை கண்டித்தும், உதவித்தொகை வழங்க கோரியும் மாற்றுத்திறனாளிகள் 300க்கும் மேற்பட்டோர் இன்று சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இது குறித்து மாற்றுத்திறனாளிகள் கூறியதாவது:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு அவருடைய உடல் ஊன தன்மைகேற்ப வேலை வழங்க வேண்டும் எனவும் அதுவும் 4 மணி நேரம் மட்டுமே வேலை வழங்க வேண்டும் முறையான ஊதிய வழங்க வேண்டும் என்று சட்டம் உள்ளது. ஆனால் இங்கு பல ஊராட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை கொடுக்க மறுத்து வருகின்றனர் . இதுகுறித்து அதிகாரிகளும் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் 35 கிலோ அரிசி வழங்க கேட்டு மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பங்கள் கொடுத்தனர். ஆனால் அதில் சிலருக்கு மட்டுமே மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அது போல் இலவச வீட்டு மனைபட்டா கேட்டு மாற்றுத்திறனாளி விண்ணப்பித்தால் உடனடியாக வீட்டுமனை வழங்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கி வந்த யூ.டி.ஐ.டி. கார்டு கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு சிலருக்கு மட்டுமே கார்டு வந்துள்ளது. இதனால் பஸ் பயணம், வங்கி கடன் உள்ளிட்ட பயன் கிடைக்காமல் உள்ளது. எனவே கலெக்டர் மாற்றுத்திறனாளிகளை பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

அவர்களிடம் தொடர்ந்து போலீசார் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன அதே பொய்யை மீண்டும் சொல்கிறது திமுக அரசு: அண்ணாமலை பேச்சு

சென்னை, ஜூலை 18

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கூறியிருப்பதாவது,

மத்திய அரசின் Revamped Distribution Sector Scheme (RDSS) திட்டத்தில் நிதி பெறவே மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளோம் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன அதே பொய்யை மீண்டும் சொல்கிறது திமுக அரசு.

இது தொடர்பாக 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் பத்திரிகையாளர்களைச் சந்தித்து திமுகவின் திசை திருப்பும் முயற்சியைத் தமிழக மக்களிடம் எடுத்துரைத்தோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் திமுக என்ன செய்துள்ளது என்பதைப் பார்ப்போம்.

★ பொருத்தப்படவேண்டிய ஸ்மார்ட் மீட்டர், DT மீட்டர், Feeder மீட்டர்களின் எண்ணிக்கை : 3,06,82,343 (மத்திய அரசு ஒப்புதல் வழங்கிய எண்ணிக்கை)

★ பொருத்தப்பட்ட மீட்டர்களின் எண்ணிக்கை: 1,30,861 (4%)

★ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனம் தனியாரிடம் செய்த மின் கொள்முதல் மதிப்பு.

2021 முதல் 22: 39,365 கோடி ரூபாய்

2022முதல் 23: 50,990 கோடி ரூபாய்

2023முதல் 24: 65,000 கோடி ரூபாய்

★ கடந்த மூன்று ஆண்டுகளில் திமுக அரசு செய்த தனியார் மின் கொள்முதல் மதிப்பு: 1,55,355 கோடி ரூபாய்.

★ RDSS திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளவேண்டிய எந்த பணிகளையும் திமுக செய்யவில்லை, மாறாக மின் கட்டணத்தை மட்டும் உயர்த்தியுள்ளது.

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்த ஒரே மாற்றம், நலிவடைந்த BGR நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் திமுக அரசால் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் ரத்து செய்யப்பட்டது மட்டுமே.

இவ்வாறு அவர் கூறியுள்ளர்.

# என்ஜினீயர் வீட்டில் 35 பவுன் நகைகள் ரூ.1½ லட்சம் கொள்ளை

தக்கலை, ஜூலை 18

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள சுவாமியார் மடத்தை அடுத்த புலிப்பணம் பகுதியை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன். இவரது மகன் மனோஜ் (வயது 34), என்ஜினீயர்.

இவர் தற்போது கோவையில் மனைவி மற்றும் மகனுடன் வசித்து வருகிறார். புலிப்பணத்தில் உள்ள வீட்டில் ராதாகிருஷ்ணனும் அவரது மனைவி சந்திரகலாவும் வசித்து வருகின்றனர். கடந்த 3 நாட்களுக்கு முன்பு ராதாகிருஷ்ணனுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து மனோஜ், சொந்த ஊருக்கு வந்தார். தொடர்ந்து தந்தையை சிகிச்சைக்காக கேரளாவில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கேயே தங்கி சிகிச்சை பெற வேண்டி இருந்ததால், சந்திரகலாவும் சென்று விட்டார்.

இதனால் அவர்களது வீடு பூட்டப்பட்டு இருந்தது. இந்த நிலையில் இன்று காலை வீட்டின் முன்பக்க கதவு பூட்டு உடைக்கப்பட்டு கிடந்தது. அதனை பார்த்தவர்கள் மனோஜுக்கு தகவல் கொடுத்தனர். அவர் உடனடியாக வீட்டுக்கு வந்தார். அப்போது வீட்டின் முன் பக்க மற்றும் பின்பக்க கதவுகள் உடைக்கப்பட்டு இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதுபற்றி தக்கலை போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன் மற்றும் போலீசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டனர். அவர்கள் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது அங்கிருந்த பீரோவும் உடைக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது. அதில் இருந்த துணிகள் மற்றும் பொருட்கள் வீடு முழுவதும் சிதறி கிடந்தன.

பீரோவில் இருந்த 35 பவுன் நகைகைள், ரூ.1½ லட்சம் மற்றும் ஒரு வெள்ளி குத்துவிளக்கு கொள்ளை போயிருப்பதாக தக்கலை போலீசில் மனோஜ் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

தடயவியல் நிபுணர்கள் வந்து கைரேகைகள் சேகரிக்கப்பட்டன. மோப்ப நாய் வரவழைக்கப்பட்டும் விசாரணை நடத்தப்பட்டது.

அந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி கேமரா பதிவுகளை கைப்பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆள் இல்லாத வீட்டின் பூட்டை உடைத்து நகைபணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாமியாரை குத்திக்கொன்ற மருமகன்





தஞ்சை, ஜூலை 18

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் அருகே உள்ள மன்னப்பன் குளம் பகுதியை சேர்ந்தவர் சங்கர். இவருடைய மகன் வீரக்குமார்(வயது 33). இவரும் அதே பகுதியை சேர்ந்த ரஞ்சிதாவும் (30) கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டனர். வீரக்குமார் தட்டு வண்டி ஓட்டி கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்துள்ளார்.

வீரக்குமாருக்கும் அவரது மனைவி ரஞ்சிதாவுக்கும் இடையே அடிக்கடி குடும்பத்தகராறு ஏற்பட்டது. கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு இவர்களுக்கு இடையே மீண்டும் குடும்ப பிரச்சினை காரணமாக தகராறு ஏற்பட்டது. இதனால் ரஞ்சிதா தனது கணவரிடம் கோபித்துக் கொண்டு தனது தாய் வீட்டுக்கு சென்றுவிட்டார்.

அதிராம்பட்டினம் வண்டிப்பேட்டை ரோட்டு பகுதியில் ரஞ்சிதாவும், அவருடைய தாய் சாந்தியும் நடந்து வந்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த வீரக்குமாருக்கும், அவரது மனைவி ரஞ்சிதா மற்றும் மாமியார் சாந்தி ஆகியோரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் ஆத்திரம் அடைந்த வீரக்குமார் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் தனது மனைவி ரஞ்சிதா மற்றும் மாமியார் சாந்தியை சரமாரியாக குத்தினார். இதில் படுகாயம் அடைந்த சாந்தியை அக்கம், பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக பட்டுக்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே சாந்தி பரிதாபமாக உயிரிழந்தார்.

கத்திக்குத்தில் படுகாயம் அடைந்த ரஞ்சிதா தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து அதிராம்பட்டினம் போலீசார் வழக்குப்பதிவு செய்து வீரக்குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குடும்பத்தகராறில், நடு ரோட்டில் வைத்து மாமியாரை மருமகன் கத்தியால் குத்திக்கொன்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# காதலுக்கு ஒருத்தி கல்யாணத்துக்கு வேறொருத்தி இளம்பெண் புகார்

கோவை, ஜூலை 18

கோவை செல்வபுரத்தை சேர்ந்தவர் இளம்பெண். இவர் கோவை சொக்கம்புதூரை சேர்ந்த ஒரு வாலிபரை 6 வருடமாக காதலித்து வந்துள்ளார். காதலனுடன் நெருக்கமாக பழகியதில் அவள் 3 மாத கர்ப்பமானாள். இதைதொடர்ந்து காதலனை திருமணம் செய்து கொள்ளுமாறு இளம்பெண் வற்புறுத்தினாள். ஆனால் காதலனின் பெற்றோர், கர்ப்பத்தை கலைத்தால் மகனை திருமணம் செய்து தருவதாக அவளிடம் கூறினர். அதனை நம்பி, அவளும் கர்ப்பத்தை கலைத்தாள். இருப்பினும் திருமணம் செய்து கொடுக்கவில்லை. இந்த நிலையில் அவளது காதலனுக்கு அவனது பெற்றோர் வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் செய்து வைத்துவிட்டனர். காதலன்தான் கணவனாக வருவான் என நம்பி இருந்த இளம் பெண்ணின் இதயம், சுக்குநூறாக நொறுங்கியது. காதலுக்கு ஒருத்தி... கல்யாணத்துக்கு வேறொருத்தி...! என்கிற கதையாய் இந்த இளம்பெண்ணின் வாழ்க்கை அமைந்தது. இதுகுறித்து அவள் கண்ணீர் மல்க, கலெக்டர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார். அதில் அவள் கூறி இருப்பதாவது: எனது நிலை குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்க வில்லை. மேலும் புகார் அளித்தால் என்னையும், எனது குடும்பத்தையும் கொலை செய்து விடுவதாக காதலித்த அந்த வாலிபர் மிரட்டுகிறார். மேலும் நெருக்கமாக இருந்த போது எடுத்த ஆபாச வீடியோக்கள், புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிடுவதாகவும் மிரட்டி வருகிறார். எனவே அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் . இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# 2 சிறுமிகள் பாலியல் பலாத்கார வழக்கில் 15 பேருக்கு தலா 20 ஆண்டு சிறை தண்டனை



விழுப்புரம், ஜூலை 18

புதுச்சேரி மாநிலம் கதிர்காமம் பகுதியை சேர்ந்த ஒரு தம்பதிக்கு 6 வயது மற்றும் 5 வயதில் 2 மகள்கள் இருந்தனர். கடந்த 2016ம் ஆண்டில் கணவன் மனைவி இடையே குடும்ப பிரச்சினை ஏற்பட்டது. இதனால் மனைவியையும், குழந்தைகளையும் விட்டு அவரது கணவர் பிரிந்து சென்றுவிட்டார்.

இதையடுத்து அந்த பெண், தனது 2 மகள்களையும் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வரும் தனது தாய் வீட்டில் விட்டு விட்டு, புதுச்சேரியை சேர்ந்த வேறொருவரை 2வதாக திருமணம் செய்துகொண்டார். இதையடுத்து அந்த சிறுமிகள் இருவரும் தங்கள் பாட்டி வீட்டில் தங்கியிருந்து, அந்த பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 201718ம் கல்வியாண்டில் 6 வயது சிறுமி 2ம் வகுப்பும், அவரது தங்கை 1ம் வகுப்பும் படித்தனர். அவர்களது பாட்டி, காலையில் விவசாய நிலத்திற்கு சென்றால் மாலையில் தான் வீடு திரும்புவது வழக்கம்.

இந்நிலையில் கடந்த 2018ம் ஆண்டில் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை முடிந்து ஜூன் மாதம் பள்ளி திறந்த 2வது வாரம் மாலை வேளையில் சிறுமிகள் இருவரும், தங்கள் பாட்டி வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது தென்நெற்குணம் கிராமத்தை சேர்ந்த இருசப்பன் மகன் பிரசாந்த் (வயது 21) என்பவர், 6 வயது சிறுமியை தனது வீட்டிற்குள் அழைத்துச்சென்று மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்தார்.

அதேபோல் மற்றொரு நாளில் தனியாக விளையாடிக்கொண்டிருந்த 5 வயது சிறுமியையும் பிரசாந்த், தனது வீட்டிற்குள் அழைத்துச்சென்று பாலியல் பலாத்காரம் செய்தார். இவ்வாறாக 2 சிறுமிகளையும் தனித்தனியாக பலமுறை அவர் பாலியல் பலாத்காரம் செய்தார். இதனிடையே சிறுமிகள் இருவருக்கும் உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

அங்கு டாக்டர்கள் பரிசோதித்து பார்த்தபோது, சிறுமிகள் இருவரும் பலரால், பலமுறை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பது தெரியவந்தது. இதைக் கேட்டு சிறுமிகளின் தாய், பாட்டி ஆகியோர் அதிர்ச்சியடைந்தனர். இது குறித்து சிறுமிகளின் தாய், கடந்த 18.7.2019 அன்று பிரம்மதேசம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

போலீசார் நடத்திய விசாரணையில், அதே கிராமத்தை சேர்ந்த பிரசாந்த் மட்டுமின்றி துரைராஜ்(47), ஜகினி என்ற துரைசாமி (55), ரவி மகன் தீனா என்ற தீனதயாளன் (24), ஆறுமுகம் மகன் அஜித்குமார் (22), இருசப்பன் மகன் பிரபா என்ற பிரபாகரன் (23), நாகப்பன் மகன் ரவிக்குமார் (23), ஆறுமுகம் மகன் அருண் என்ற தமிழரசன்(24), ராமலிங்கம் மகன் மகேஷ் (37), துரைசாமி மகன் ரமேஷ் (30), துரைராஜ் மகன் மோகன் என்ற சந்திரமோகன் (23), சின்னராஜ் மகன் செல்வம் (37), சுப்பிரமணியன் மகன் கமலக்கண்ணன் (30), வாசுதேவன் மகன் முருகன் (40), சின்னராஜ் மகன் செல்வசேகர் (30) ஆகியோரும் ஒரு வருடத்திற்குள் ஒவ்வொருவருக்கும் தெரியாமல் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் அந்த சிறுமிகள் இருவரையும் வலுக்கட்டாயமாக அழைத்துச்சென்றுமிரட்டி பாலியல் பலாத்காரம் செய்திருப்பது தெரியவந்தது.

இதையடுத்து போக்சோ சட்டம் உள்ளிட்ட 7 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து, அவர்கள் 15 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். இது விழுப்புரம் மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை, விழுப்புரம் போக்சோ வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இதனிடையே வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே 5 வயது சிறுமி உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்தாள்.

இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்த நிலையில் நீதிபதி வினோதா நேற்று தீர்ப்பு கூறினார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

2 சிறுமிகளையும் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக 15 பேருக்கும் தலா 20 ஆண்டு வீதம் 40 ஆண்டு சிறை தண்டனையும், தலா ரூ.32 ஆயிரம் அபராதம் விதித்தும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாக அரசு சார்பில் ரூ.4 லட்சத்து 50 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும், இந்த இழப்பீட்டு தொகையுடன், குற்றவாளிகள் 15 பேருக்கும் விதிக்கப்பட்டுள்ள அபராத தொகையான மொத்தம் ரூ.4 லட்சத்து 80 ஆயிரத்தையும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.9 லட்சத்து 30 ஆயிரத்தை பாதிக்கப்பட்ட சிறுமிக்கு வழங்க வேண்டும் என்றும், இந்த தண்டனை காலங்களை குற்றவாளிகள் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது. ஏக காலம் என்பதால் 15 பேரும் தலா 20 ஆண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து சிறை தண்டனை விதிக்கப்பட்ட 15 பேரும், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் விழுப்புரம் கோர்ட்டில் இருந்து போலீஸ் வேனில் அழைத்துச்செல்லப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# மனைவி அடிக்கடி தகராறு... திருமணம் செய்து வைத்த புரோக்கரை தாக்கிய தொழிலாளி கைது

விழுப்புரம், ஜூலை 18

விழுப்புரம் மாவட்டம் வளவனூர் அருகே வடவாம்பழத்தை சேர்ந்தவர் ஜானகிராமன் மகன் சக்திவேல் (42). தொழிலாளி. இவருக்கு கடந்த 12 வருடத்திற்கு முன்பு திருமண புரோக்கரான அரசமங்கலத்தை சேர்ந்த பெருமாள் (69) என்பவர் தனது ஊரை சேர்ந்த ஜெகதீஸ்வரி என்பவரை திருமணம் செய்து வைத்துள்ளார்.

இந்த நிலையில் குடும்ப பிரச்சினை காரணமாக சக்திவேலுக்கும், ஜெகதீஸ்வரிக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. சம்பவத்தன்று கணவன்மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் கோபமடைந்த ஜெகதீஸ்வரி கணவரிடம் கோபித்து கொண்டு தனது தாய் வீட்டுக்கு சென்றதாக தெரிகிறது. இந்த நிலையில் அரசமங்கலம் ரேஷன் கடை அருகில் பெருமாள் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு சென்ற சக்திவேல், நீ தானே எனக்கு பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தாய். தற்போது என் மனைவி என்னிடம் அடிக்கடி தகராறு செய்து வருகிறாள். என்று கூறி பெருமாளை திட்டி தாக்கியதாக தெரிகிறது. இது குறித்த புகாரின் பேரில் வளவனூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து சக்திவேலை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மனைவி கள்ளக்காதலனுடன் ஓட்டம்: மகளுக்கு விஷம் கொடுத்து கொன்று தச்சுத்தொழிலாளி தற்கொலை

சென்னை, ஜூலை 18

மனைவி கள்ளக்காதலனுடன் ஓடிபோனதால் வேதனை அடைந்த தச்சுத்தொழிலாளி, 5 வயது மகளுக்கு விஷம் கொடுத்து கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரிதாபத்தை ஏற்படுத்தியுள்ளது.

பூந்தமல்லி அடுத்த சென்னீர்க்குப்பம் வாணியர் தெருவை சேர்ந்தவர் மோகன் (வயது 32). தச்சுத்தொழிலாளியாக வேலை செய்து வந்தார். அவரது மனைவி பரிமளா (28). இந்த தம்பதியினருக்கு நட்சத்திரா (5) என்ற மகள் இருந்தார். பரிமளாவுக்கு அவரது உறவினர் ஒருவருடன் கள்ளக் காதல் ஏற்பட்டதாக தெரிகிறது. இதையறிந்த மோகன் மனைவி பரிமளாவை கண்டித்ததாக தெரிகிறது.

ஆனால் மோகனுடன் தொடர்ந்து வாழ விரும்பாத பரிமளா, தனது மகள் நட்சத்திராவுடன் கள்ளக்காதலனுடன் ஓட்டம் பிடித்ததாக தெரிகிறது. இதையறிந்த மோகன் மனைவி வசிக்கும் இடத்துக்கு சென்று பரிமளாவிடம் வாக்குவாதம் செய்த நிலையில், அவர்களிடமிருந்து குழந்தை நட்சத்திராவை தன்னுடன் அனுப்புமாறு கூறியுள்ளார்.

இதையடுத்து பரிமளா மகள் நட்சத்திராவை கணவர் மோகனுடன் அனுப்பி வைத்தார். எனினும் மனைவி வேறு ஒருவருடன் ஓட்டம் பிடித்ததால் மனமுடைந்த மோகன், குழந்தையை கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தார். வீட்டில் இருந்தபோது, உணவில் விஷம் கலந்து மகள் நட்சத்திராவுக்கு மோகன் சாப்பிட கொடுத்தார். அதை உண்ட குழந்தை சிறிது நேரத்தில் வாயில் நுரை தள்ளிய நிலையில் பரிதாபமாக உயிரிழந்தது. பின்னர் மோகன் வீட்டில் உள்ள அறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த நிலையில் நேற்று காலை நீண்ட நேரமாகியும் வீட்டிலிருந்து மோகனும், அவரது மகளும் வெளியே வராததால் அக்கம் பக்கத்தினர் சந்தேகம் அடைந்து பூந்தமல்லி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து வந்த போலீசார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது, குழந்தை நட்சத்திரா வாயில் நுரை தள்ளியபடியும், மோகன் தூக்குப்போட்டு இறந்த நிலையில் கிடப்பது தெரியவந்தது. இதையடுத்து தந்தை, மகள் உடல்களை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்கு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து பூந்தமல்லி போலீசார் வழக்குப் பதிவு செய்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

மனைவி கள்ளக்காதலனுடன் ஓட்டம் பிடித்ததால் மனமுடைந்த கணவர் மகளுக்கு விஷம் கொடுத்து கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதி மக்களை கண்கலங்கச்செய்தது. தாயின் தகாத உறவு ஒரு குடும்பத்தை சிதைத்த பரிதாபம் அப்பகுதியில் அரங்கேறியது பரிதாபத்தை ஏற்படுத்தியது

# 2வது திருமணம் செய்த தாயை மீட்டுத்தர வேண்டும் 15 வயது சிறுவன் புகார் மனு

வேலூர், ஜூலை 18

வேலூர் சத்துவாச்சாரி பகுதியை சேர்ந்த 15 வயது சிறுவன் வேலூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

நான் 10ம் வகுப்பு படிக்கிறேன். எனது அம்மா அப்பா கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து விட்டனர். இதனால் நான் பாட்டி வீட்டில் வசித்து வந்தேன். இந்த நிலையில் எனது அம்மா வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டார். நான் அதை எனது அம்மாவிடம் தட்டிக் கேட்டேன். அதனால் என்னை அவர் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்.

மேலும் எனது பாட்டி வீட்டிலும் என்னை சேர்க்கவில்லை. சேர்ந்து வாழ எனது தந்தை அழைத்தும் தாயார் வரவில்லை. எனக்கும், என் அப்பாவுக்கும் ஆதரவு இல்லை. இப்போது எங்கே செல்வது என எனக்கு தெரியவில்லை. எனவே இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து எனது தாயை மீட்டுத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கபினி அணையில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறப்பு அதிகரிப்பு



சேலம், ஜூலை 18

கர்நாடக மாநிலம் மைசூர், குடகு மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக அங்குள்ள அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. மைசூரு மாவட்டம் எச்.டி. கோட்டை தாலுகா பீச்சனஹள்ளியில் அமைந்து உள்ள கபினி அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 84 அடியாகும். இந்த அணைக்கு நேற்றைய நிலவரப்படி நீர்வரத்து விநாடிக்கு 14 ஆயிரத்து 697 கன அடியாக இருந்தது.

இந்த நிலையில் இன்று மேலும் நீர்வரத்து அதிகரித்து விநாடிக்கு 22 ஆயிரத்து 840 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தற்போது 82.36 அடியாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணையில் நீர் முழு கொள்ளளவை எட்டும் நிலையில் கடந்த 13ந்தேதி மாலையில் விநாடிக்கு 20 ஆயிரம் கன அடி தண்ணீர் கபிலா ஆற்றில் திறந்து விடப்பட்டது. தொடர்ந்து இன்று காலை முதல் 20 ஆயிரம் கன அடியில் இருந்து 23 ஆயிரத்து 333 கன அடியாக அதிகரித்து அணையில் இருந்து தண்ணீர் கபிலா ஆற்றில் திறந்து விடப்பட்டு வருகிறது. இந்த தண்ணீர் நேரடியாக காவிரி ஆற்றில் சங்கமிக்கிறது.

இதேபோல் மண்டியா மாவட்டம் ஸ்ரீரங்கபட்டணா தாலுகா கண்ணம்பாடி அருகே காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கே.ஆர்.எஸ் அணை நிரம்பி வருகிறது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 124.80 அடி ஆகும். அணைக்கு நீர்வரத்து 25 ஆயிரத்து 933 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் தற்போதைய நீர்மட்டம் 107.60 அடியாக உள்ளதால் அந்த அணையின் பாதுகாப்பு கருதி விநாடிக்கு 579 கன அடி நீர் காவிரியில் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இந்த 2 அணைகளில் இருந்தும் மொத்தம் 23 ஆயிரத்து 912 கன அடி உபரி நீர் தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் கடந்த 2 தினங்களுக்கு முன்பு காவிரி ஆற்றில் திறக்க ப்பட்ட உபரிநீர் நேற்று மாலை 5 மணி அளவில் தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுவை வந்தடைந்தது. இதனால் நேற்று மாலை 4,500 கன அடியில் இருந்து 10 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. பின்னர் இரவு 7 மணி அளவில் 15 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. இந்த நீர்வரத்தை மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

இதனால் ஒகேனக்கல் ஐந்தருவி, பெரியபாணி, மெயின் அருவி, சினிஅருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. நீர்வரத்து மேலும் அதிகரிக்க கூடும் என்பதால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று முதல் பரிசல் இயக்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மறு உத்தரவு வரும் வரை இந்த தடை உத்தரவு தொடரும் என தருமபுரி மாவட்ட கலெக்டர் சாந்தி தெரிவித்துள்ளார்.

மேலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வதால் அணைகளில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடும் நேரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் காவிரி ஆற்றின் கரையோரம் உள்ள பொதுமக்கள் இரவு நேரங்களில் கரையை கடப்பதை தவிர்க்க வேண்டும் எனவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் வருவாய்த்துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். கர்நாடக அணைகளில்இருந்துதிறக்கப்பட்ட தண்ணீர் ஒகேனக்கல் வழியாக நேராக மேட்டூர் அணைக்கு வருகிறது. நேற்று முன்தினம் விநாடிக்கு 4,013 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 4,047 கன அடியாக அதிகரித்தது. மேலும் இன்று காலையில் நீர்வரத்து அதிகரித்து 5054 கன அடி தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் காவிரி ஆற்றில் வெளியேற்றப்படுகிறது.

அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவை விட நீர்வரத்து அதிகமாக உள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 8 மணி அளவில் 43.83 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மளமளவென உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் காவிரி ஆற்றில் 23ஆயிரம் கனஅடிக்கு மேல் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது.

# அமராவதி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்வு: பஞ்சலிங்க அருவியில் 2வது நாளாக குளிக்க தடை



உடுமலை, ஜூலை 18

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமராவதி அணை கட்டப்பட்டுள்ளது. கேரளா மற்றும் தமிழக வனப்பகுதியில் உற்பத்தியாகின்ற பாம்பாறு, தேனாறு, சின்னாறு உள்ளிட்ட ஆறுகள் மற்றும் சிறு சிறு ஓடைகள் மூலமாக மழைக்காலங்களில் அணைக்கு நீர்வரத்து ஏற்படுகிறது.

அதை ஆதாரமாக கொண்டு பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன திட்டத்தின் கீழ் திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரத்து 637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. அத்துடன் அமராவதி பிரதான கால்வாய் மற்றும் அமராவதி ஆற்றை அடிப்படையாகக் கொண்டு குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் கடந்த 2 நாட்களாக அமராவதி அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் சாரல் மழையும், அவ்வப்போது பலத்த மழையும் பெய்து வருகிறது. இதன் காரணமாக அணைக்கு வந்து கொண்டிருந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. அத்துடன் பலத்த மழையின் காரணமாக அணைக்கு வந்து கொண்டுள்ள நீர்வரத்து 7ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

மேலும் கனமழை பெய்வதற்கான வாய்ப்புகள் நிலவுவதால் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பதற்கான சூழல் உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். மேலும் அணைக்கு ஏற்பட்டுள்ள நீர்வரத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். இன்றுகாலைநிலவரப்படி 90 அடி உயரம் கொண்ட அணையில் 72.34 அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது. ஒரே நாளில் 8 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன்காணப்பட்டது. திருப்பூர் மாநகரின் ஒரு சில பகுதிகளில் சாரல் மழை பெய்தது. இந்நிலையில் இன்று காலை 8 மணி வரையிலான நிலவரப்படி பல்லடத்தில் 4 மில்லி மீட்டர் மழை , தாராபுரம் தாலுக்கா பகுதியில் 4 மி.மீ., , உப்பாறு அணை பகுதியில் 10 மி.மீ., உடுமலைப்பேட்டை பகுதியில் 27 மி.மீ., அமராவதி அணை பகுதியில் 22 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் அதிகபட்சமாக திருமூர்த்தி அணை பகுதியில் 51 மில்லி மீட்டரும் , மடத்துக்குளம் தாலுகா பகுதியில் 10 மில்லி மீட்டர் என மாவட்டம் முழுவதும் 178 மில்லி மீட்டர் மழை பொழிவு பதிவாகி இருப்பதாகவும், சராசரியாக 8.90 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை முதல் லேசான சாரல் மழை விட்டு விட்டு பெய்து வருவதால் திருப்பூரில் குளுகுளு வானிலை நிலவி வருகிறது. உடுமலை திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் நீர் வரத்துஅதிகரித்துள்ளதால் இன்று 2வது நாளாக குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மதுரை: அமைச்சர் வீட்டருகே நாம் தமிழர் கட்சி நிர்வாகி வெட்டிக்கொலை



மதுரை, ஜூலை 18

மதுரையில் நடைபயிற்சி சென்ற நாம் தமிழர் கட்சி நிர்வாகி ஓடஓட விரட்டி வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சொக்கிகுளம் வல்லபாய் தெரு பகுதியில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வீட்டின் அருகே நாம் தமிழர் கட்சியின் மதுரை வடக்கு துணைச் செயலாளர் பாலசுப்பிரமணியன் நடைபயிற்சி மேற்கொண்டு வந்தார். அப்போது அவரை பின்தொடர்ந்து வந்த 4 பேர் கொண்ட கும்பல் பாலசுப்பிரமணியனை ஓடஓட விரட்டி வெட்டி படுகொலை செய்தது.

சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த தல்லாகுளம் போலீசார், படுகொலை செய்யப்பட்ட பாலசுப்பிரமணியன் உடலை பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் அப்பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

சென்னையில், பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டு 10 நாட்களே ஆகும் நிலையில், மதுரையில் அமைச்சர் வீட்டருகே நாம் தமிழர் கட்சி நிர்வாகி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மதுவிலக்குப் பிரிவுக்கு இயக்குனர் நியமனம்: மேலும் 25 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஜூலை 18

தமிழகத்தில் மேலும் 25 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையராக ஸ்ரீதர் நியமனம்.

மதுவிலக்குப் பிரிவு இயக்குனராக கார்த்திகா நியமனம்.

ஜவுளித்துறை இயக்குனராக ஜெயகாந்தன் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் கள்ளச்சாராய சம்பவங்களைத் தடுக்க மதுவிலக்குப் பிரிவு இயக்குனர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே தமிழகம் முழுவதும் 10 மாவட்ட கலெக்டர்களை மாற்றம் செய்த உத்தரவிட்ட தமிழக அரசு முக்கிய துறைகளின் செயலாளர்களை மாற்றியுள்ளது.

# டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் ரெயில் மறியல்



தஞ்சாவூர், ஜூலை 18

காவிரியில் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் விட மறுக்கும் மற்றும் காவிரி ஒழுங்காற்றுகுழு உத்தரவுபடி தினமும் 1 டிஎம்சி தண்ணீர் திறக்க மறுக்கும் கர்நாடக அரசை கண்டித்தும், தமிழகத்திற்கு உரிய நீரை திறக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசை கண்டித்தும் இன்று (செவ்வாய்க்கிழமை) தஞ்சை, திருவாரூர் , நாகை, மயிலாடுதுறை உள்ளிட்ட 8 டெல்டா மாவட்டங்களில் ரெயில் மறியல் போராட்டம் நடைபெறும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த இரு தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள் இணைந்து அறிவித்தன.

அதன்படி டெல்டா மாவட்டங்களில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் இன்று ரெயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ரெயில் நிலையத்திற்கு வந்த மயிலாடுதுறை பயணிகள் ரெயிலை விவசாயிகள் தண்டவாளத்தில்அமர்ந்து மறித்தனர். இந்த ரெயில் மறியல் போராட்டத்திற்கு விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகள் ஜோசப், தம்புசாமி ஆகியோர் தலைமை தாங்கினார்.

இந்த ரெயில் மறியல் போராட்டத்தில் சி.பி.ஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆர்.வீரமணி, துரை அருள்ராஜன், விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஆர்.சதாசிவம், வி.எம்.கலியபெருமாள், ஏ.ராஜேந்திரன், எம்.ஆர்.முருகேசன், பி.பரந்தாமன் உட்பட 100 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அப்போது விவசாயிகள் கர்டாக அரசைகண்டித்து கோஷங்களை எழுப்பினர். இதைத் தொடர்ந்து மறியலில் ஈடுப்பட்டவர்களை போலீசார் கைது செய்து அருகில் உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கபட்டனர். இதன் பின்னர் ரெயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது.

இதே போல் திருவாரூரில் இருந்து பட்டுகோட்டை நோக்கி சென்ற பயணிகள் ரெயிலை திருத்துறைப்பூண்டி ரெயில் நிலையத்தில்விவசாயிகள் ரெயிலை மறித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இந்த போராட்டத்திற்கு திருத்துறைப்பூண்டி எம்.எல்.ஏ. மாரிமுத்து தலைமை தாங்கினார். போராட்டத்தில் 100க்கும் மேற்பட்ட விவசாய சங்கத்தினர் கலந்து கொண்டனர். பின்னர் போராட்டத்தில் ஈடுப்பட்ட எம்.எல்.ஏ. மாரிமுத்து உள்பட அனைவரையும் போலீசார் கைது செய்து அருகில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். இதனால் பயணிகள் ரெயில் ½ மணி நேரம் தாமதமாக புறப்பட்டு சென்றது.

இதைப்போல் நீடாமங்கலம் ரெயில்நிலையத்தில் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் திருவாரூர் மாவட்டத் துணைச்செயலாளர் சுப்பிரமணியன், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் திருவாரூர் மாவட்ட பொருளாளர் ராவணன் ஆகியோர் தலைமையில் காரைக்கால் பயணிகள் ரெயிலை மறித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இதில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சிநீடாமங்கலம் ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணியன், வலங்கைமான் (சிபிஎம்) ஒன்றிய செயலாளர் ராதா மற்றும் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பின்னர் அனைவரையும் போலீசார் கைது செய்து அருகில் உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். இதைத்தொடர்ந்து ரெயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது. இதைப்போல் திருவாரூர், மயிலாடுதுறை, சீர்காழி, கும்பகோணம், நாகை, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் விவசாய சங்கங்கள் சார்பில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதனால் டெல்டா மாவட்டங்களில் பதட்டமான சூழ்நிலை நிலவியது.

# தூய்மை பணியாளர்களை தள்ளி நிற்க சொன்ன நடிகை ரோஜா? திருச்செந்தூர் கோவிலில் நடந்த அதிர்ச்சி



திருச்செந்தூர், ஜூலை 18

முருகனின் அறுபடை வீடுகளில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில், 2ம் படை வீடாகும். இங்கு ஆண்டுதோறும் ஆனி வருசாபிஷேக விழா நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டுக்கான ஆனி வருசாபிஷேக விழா நேற்று நடந்தது. இந்த விழாவில் ஏராளமான மக்கள் சுவாமி தரினம் செய்தனர்.

இந்த விழாவில் ஆந்திர முன்னாள் அமைச்சரும், நடிகையுமான ரோஜா கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார். நடிகை ரோஜா, பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்த பின்னர், கோவிலிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அப்போது ஏராளமானோர் நடிகை ரோஜா மற்றும் அவரது கணவர் செல்வமணி ஆகியோருடன் செல்பி எடுக்க ஆர்வம் காட்டினர். அவர்கள் அனைவருடனுமே நடிகை ரோஜா செல்பி எடுத்தார்.

இதை தொடர்ந்து தூய்மை பணியாளர்கள் சிலர் செல்பி எடுக்க விரும்பினார்கள். ஆர்வமுடன் அவர்கள் ரோஜாவின் மிக அருகில் வந்து நெருங்கி நிற்க முயன்றனர். அப்போது ரோஜா திடீரென கொஞ்சம் தள்ளி நிற்குமாறு கைகாட்டினாராம். இதனால் சற்று தள்ளி நின்றபடியே தூய்மை பணியாளர்கள் நடிகை ரோஜா உடன் செல்பி எடுத்தனர்.

இந்நிலையில், இந்த வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகி உள்ளது. அதில் நடிகை ரோஜா, தனது அருகில் நின்று செல்பி எடுக்க வந்த தூய்மை பணியாளர்களை தள்ளி நிற்க சொன்னதாக இடம் பெற்றுள்ளது. இதனை பார்த்த நெட்டிசன்கள் ஏன் இப்படி செய்கிறார் ரோஜா என்று ஆவேசத்துடன் கேள்வி எழுப்பி வருகிறார்கள். இந்த வீடியோவை பார்த்த பலரும் நடிகை ரோஜாவை விமர்சித்து வருகிறார்.

# 2019ம் ஆண்டு நீட்தேர்வு முறைகேடு: சிபிசிஐடி போலீசார் முறையாக கையாளவில்லை நீதிபதி புகழேந்தி



சென்னை, ஜூலை 18

நீட்தேர்வு முறைகேடு தொடர்பான வழக்கின் விசாரணையை சிபிசிஐடி போலீசார் முறையாக கையாளவில்லை என்று அதனால் விசாரணை அதிகாரியை மாற்றுங்கள் என உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி புகழேந்தி காட்டமாககருத்தை பதிவு செய்து இருக்கிறார்.

இந்த வழக்கின் பின்னணியானது கடந்த 2019ஆம் நடைபெற்ற நீட் தேர்வில் ஆள்மாறாட்டம் செய்து அரசு மருத்துவ கல்லூரியில் மாணவர்கள் பலர் சேந்திருக்கிறார்கள். தேனி அரசு மருத்துவ கல்லூரியை சேர்ந்த சென்னை மாணவர் உதிப் சூர்யா என்பவர் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை செய்த போது பெரும் அதிர்ச்சி வெளியானது. 2019 ஆண்டு தேர்வில் உத்தர பிரதேசம், டெல்லி, கல்கத்தா, ராஜஸ்தான் போன்ற இடங்களில் ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுந்திய சம்பவங்கள் நடைபெற்றது. இந்த சம்பவம் மாணவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கை தமிழக அரசு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக இன்று வழக்கு விசாரணைக்கு வந்த போது மாநில அரசின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் நீதிபதியிடம் செய்தி ஊடகங்கள், பத்திரிக்கைகள் கண்ணபிண்ண என செய்திகளை வெளியிடுகிறது என உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் அதற்கான ஆதாரங்களை காண்பித்தார்.

அதற்கு பதில் அளித்த நீதிபதி செய்தி ஊடகங்கள் சரியாகத்தான் செய்திகளை வெளியிடுகிறது என்று கூறினார். மாணவர்களின் அனைத்து அணிகலன்களையும் கழற்றி சோதனை செய்யும் நீங்கள், போலியாக தேர்வு எழுதிய மாணவர்களை ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற கேள்வியையும் எடுத்து வைத்தார்.

அதுபோக நீட் தேர்வு முறைகேடு தொடர்பான வழக்கின் விசாரணையை சிபிசிஐடி போலீசார் முறையாக கையாளவில்லை விசாரணை அதிகாரியை உடனடியாக மாற்றுங்கள் என நீதிபதி அறிவுறுத்தி இருக்கிறார்.

மேலும் சிபிசிஐடி கேட்கும் வழக்கு குறித்த ஆவணங்களை தேசிய தேர்வு முகமை 19ம் தேதிக்குள் வழங்க வேண்டும் எனவும் உயர்நீதிமன்ற மதுரை கிளையானது உத்தரவு பிறப்பித்துள்ளது.

# விளாத்திகுளம் பேரூராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை.. ரூ.1.34 லட்சம் சிக்கியது



விளாத்திகுளம், ஜூலை 18

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேரூராட்சி அலுவலகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாக லஞ்சஒழிப்புத்துறை போலீசாருக்கு புகார்கள் வந்தன. மேலும் அலுவலகத்தில் பணம் கைமாறுவதாகவும் தகவல் கிடைத்தது.

இதையடுத்து லஞ்ச ஒழிப்புத்துறை துணை சூப்பிரண்டு பீட்டர் பால்துரை தலைமையில் இன்ஸ்பெக்டர் அனிதா உள்ளிட்டோர் கொண்ட குழுவினர் மதியம் பேரூராட்சிக்கு அலுவலகத்திற்கு சென்றனர். அப்போது போலீசாரில் சிலர் சாதாரண உடையிலும், டிரைவர் போன்று உடை அணிந்தும் வந்தனர்.

அங்கிருந்த பொதுமக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். பின்னர் லஞ்ச ஒழிப்பு போலீசார் அலுவலக கதவுகளை பூட்டினார்கள். அங்குள்ள அனைத்து அறைகளிலும் அதிரடியாக சோதனை செய்தனர். மேலும் அலுவலகத்தில் வெளியே இருந்த வாகனங்களிலும் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையின் போது பேரூராட்சி செயல் அலுவலரான மகேஸ்வரன் (வயது 59) என்பவரிடம் ரூ.1.09 லட்சம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதேபோல் அலுவலக பணியாளர்களிடம் ரூ.25,500 இருந்தது. இந்த பணத்திற்கு அவர்களிடம் கணக்கு இல்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்து கணக்கில் வராத ரூ.1.34 லட்சத்தை லஞ்ச ஒழிப்பு போலீசார் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக போலீசார்வழக்குப்பதிவுசெய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். விளாத்திகுளம் பேரூராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புபோலீசார்சோதனை நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 1000 கிராபிக்ஸ் காட்சிகளுடன் உருவாகியுள்ள சதுர் திரைப்படம்




அறிமுக இயக்குனர் அகஸ்டின் பிரபு இயக்கத்தில் உருவாகியுள்ள படம் சதுர். இப்படத்தில் அமர் கதாநாயகனாக நடித்துள்ளார். அவருடன் ஜீவா ரவி, இஷிதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்தை மணிகண்டன் தயாரித்துள்ளார்.

படம் பற்றி இயக்குனர் கூறியதாவது:


நான் கோவையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வி.எப்.எக்ஸ். கிராபிக்ஸ் காட்சிகளை வடிவமைக்கும் மேற்பார்வையாளர் பணி புரிந்தேன். ஏராளமான விளம்பர படங்களுக்கு கிராபிக்ஸ் செய்துள்–ளேன். அந்த அனுபவத்தால் ஒரு கதையை தயார் செய்தேன். அந்த கதை தான் 'சதுர்' படமாக உருவாகியுள்ளது.

படத்தில் 4 காலகட்டத்தில் கதை இருப்பதால் சதுர் என பெயர் வைத்துள்ளோம். 500 ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிய மன்னன் காலத்தில் ஒரு கதை. அடுத்து இரண்டாம் உலகப்போர் சமயத்தில் ஹிட்லர் சம்பந்தப்பட்ட கதை, அதேபோல் 1967ம் ஆண்டு தனுஷ்கோடி நகரம் கடலுக்குள் எப்படி சென்றது என்பது போன்ற கதை, அதோடு இந்த காலகட்டத்தில் நடக்கும் ஒரு கதை என 4 கால கதைகள் இதில் உள்ளது.

கதாநாயகன் அமர் தொல்பொருள் துறை ஆராய்ச்சியாளராக நடித்துள்ளார். பெரிய படங்களுக்கு நிகராக 1250 கிராபிக்ஸ் காட்சிகள் இதில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இந்திய அளவில் அதிக கிராபிக்ஸ் காட்சிகள் உள்ள 20 படங்களில் இப்படமும் ஒன்று. தமிழகத்தில் 10 படங்களில் இப்படமும் இடம்பெறும். படம் முழுவதும் நிறைவடைந்து இறுதி கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. படத்தை ஆகஸ்ட் மாதம் வெளியிட திட்டமிட்டுள்ளோம் என்றார்.

படத்தின் டிரைலர் தற்பொழுது வெளியாகியுள்ளது.

# சர்தார் 2 வில் இணைந்த எஸ்.ஜே சூர்யா






கடந்த 2022 ஆம் ஆண்டு நடிகர் கார்த்தி, இயக்குநர் பிஎஸ் மித்ரன் கூட்டணியில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற படம் சர்தார். இப்படத்தை பிரின்ஸ் பிக்சரஸ் நிறுவனம் தயாரித்தது.

கார்த்தி இப்படத்தில் இரண்டு வேடங்களில் நடித்து இருப்பார். கார்த்தியுடன் ராஷி கன்னா, லைலா, முனிஷ்காந்த், மற்றும் பலர் நடித்து இருந்தனர்.

இந்த படத்தின் இரண்டாம் பாகம் வெளியாவது ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், சர்தார் 2 திரைப்படம் பூஜையுடன் கடந்த வாரம் துவங்கியது. இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கவுள்ளார்.

படத்தில் எஸ்.ஜே சூர்யா நடிக்கவுள்ளதாக படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். சமீபத்தில் வெளிவந்த இந்தியன் 2 திரைப்படத்தில் வித்தியாசமான கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார்.

சர்தார் 2 திரைப்படத்தில் எம்மாதிரியான கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளார் என்று ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

# விடுதலை பாகம் இரண்டின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு




இயக்குனர் வெற்றிமாறன் பொல்லாதவன், விசாரணை, ஆடுகளம், அசுரன், வட சென்னை போன்ற பல வெற்றி படங்களை இயக்கியதன் மூலம் ரசிகர்கள் மனதில் நிலையான இடம் பிடித்தவர். பெயருக்கு ஏற்றார் போல இயக்கும் படம் அனைத்தும் வெற்றியே. தொடர்ந்து அவர் இயக்கிய எல்லா திரைப்படமும் வெற்றி பெற்றதன் காரணத்தினால் அவர் இயக்கும் திரைப்படத்திற்கு மக்களின் எதிர்பார்ப்பு எப்பொழுதும் உண்டு. இவர் கடந்த 2023 ஆம் ஆண்டு சூரி, விஜய் சேதுபதி நடிப்பில் விடுதலை திரைப்படத்தை இயக்கியிருந்தார். விடுதலை படத்தின் முதல் பாகமாக வெளியான இந்த படத்தில் சூரி, விஜய் சேதுபதியுடன் இணைந்து கௌதம் வாசுதேவ் மேனன், சேத்தன், பவானி ஸ்ரீ, இளவரசு போன்ற நடிகர்கள் நடித்திருந்தனர். சூரியின் திரைப்பயணத்தில் இப்படம் திருப்பு முனையாக அமைந்தது. இந்த படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று பல்வேறு தரப்பினரால் பாராட்டப்பட்டது. இளையராஜாவின் இசையில் வெளியான பாடல்களும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. அதைத் தொடர்ந்து விடுதலை இரண்டாம் பாகத்தை இயக்கி வருகிறார் வெற்றிமாறன். இதில் சூரி, விஜய் சேதுபதி, மஞ்சு வாரியர், அட்டக்கத்தி தினேஷ் ஆகியோர் நடிக்கின்றனர். மேலும் இதில் எஸ் ஜே சூர்யா நடிப்பதாக ஏற்கனவே தகவல் வெளியானது.

விடுதலை பாகம் ஒன்று பல்வேறு சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு மக்களின் பாராட்டை வென்றது. விடுதலை 2 படப்பிடிப்பு ஏற்கனவே தொடங்கப்பட்டு பல கட்டங்களாக நடைபெற்றது. இது குறித்து படக்குழுவினர் வெளியிட்ட போஸ்டரில்

"உயிர்ப்ப ஊறல்லர் மன்ற செயிர்ப்பவர்

செம்மல் சிதைக்கலா தார்" என்ற திருக்குறள் இடம்பெற்றுள்ளது. அதற்கு விளக்கமானது பகைவரின் செருக்கைக் கெடுக்கும் வாய்ப்பு வந்த போதும், அவர் மீதுள்ள இகழ்ச்சியால் அதனைச் செய்யாத அரசர், பின்னர், உயிரோடு இருப்பதற்கு உரியவர் ஆகார் என்பதாகும். இந்த குறளுக்கும் விடுதலை படத்திற்கும் எம்மாதிரியான ஒப்பீட்டு இருக்குமென பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும். தற்பொழுது விடுதலை பாகம் 2 இன் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகும் என படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

# ஓடிடியில் வெளியாகும் மலையாள சூப்பர் ஸ்டார்ஸ் நடித்த `மனோரதங்கள்'




எம்.டி. வாசுதேவன் மலையாளத்தின் பிரபல திரைக்கதை எழுத்தாளர் மற்றும் திரைப்பட இயக்குனர் ஆவார். அசுரவித்து, மஞ்சு, ரண்டமூசம் மற்றும் வாரணாசி ஆகிய படைப்புகளின் மூலம் அறியப்பட்டவர்.

எம்.டி.வாசுதேவனின் 9 சிறுகதைகளின் அடிப்படையில் ஆந்தலாஜி தொடராக உருவாகியுள்ளது. இந்தத்தொடரில் கமல்ஹாசன், மோகன்லால், மம்முட்டி, பகத் பாசில் உள்ளிட்ட இந்திய சினிமாவின் பெரிய நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று எம்.டி.வாசுதேவனின் 91 பிறந்த நாளை முன்னிட்டு இத்தொடரின் டிரெய்லர் வெளியானது. சிறந்த நடிகர்கள் நடித்த, 8 இயக்குனர்களால் இயக்கப்பட்ட 9 படங்களில் உள்ள கண்ணோட்டத்தை இந்த டிரெய்லர் வெளிப்படுத்துகிறது.

"ஒல்லாவும் தீரவும், கடுகண்ணவ ஒரு யாத்ரா, காழ்சா, ஷீலாலிகாதம், வில்பனா, ஷெர்லாக், ஸ்வர்கம் துரக்குண சமயம், அபயம் தீடி வேண்டும், கடல்கட்டு" இந்த 9 படங்களின் தொகுப்பை கொண்டு இந்த 'மனோரதங்கள்' தொடர் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தொடர் கடந்த 2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. முதலில் பிரபல ஓடிடி நிறுவனமான நெட்பிலிக்ஸ் வாங்க இருந்தனர் ஆனால் சூழ்நிலை காரணமாக ஜீ5 ஓடிடி தளம் இத்தொடரை வெளியிடவுள்ளது.

மோகன்லால் தனது சமூக வலைதள பக்கத்தில் இந்த தொடர் குறித்த பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் 'மனோரதங்கள்' தொடர் அடுத்த மாதம் 15ம் தேதி ஜீ5 ல் வெளியாகும் என்று அறிவித்துள்ளார். தொடரின் டிரைலர் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அனைத்து திரை ஜாம்பவாங்கள் ஒன்றாக ஒரே தொடரில் நடிக்க இருப்பதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு எகிரியுள்ளது.

# ஆறுமாதங்கள் வரை டார்க் ரூமில் தங்கியிருந்தேன் இயக்குநர் சிங்கம்புலி



அக்ஷயா மூவி மேக்கர்ஸ் சார்பில் லயன் ஈ நடராஜ் தயாரிப்பில் ஈ.கே. முருகன் இயக்கத்தில் உருவாகியுள்ள புதிய படம் 'பார்க்' என்ற தலைப்பில் உருவாகி இருக்கிறது. இந்த படத்தின் இசை மட்டும் டிரைலர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் திரைப்பட இயக்குநர்கள் ஆர்.வி.உதயகுமார், பேரரசு, சிங்கம்புலி, சரவண சுப்பையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். விழாவில் இயக்குநர் சிங்கம் புலி பேசும்போது, "நான் போட்டோ ஸ்டுடியோவில் பிலிம்களை டெவலப் செய்யும் டார்க் ரூமில் ஆறு மாதம் தங்கி இருந்தேன். ஒன்றுமே பார்க்க முடியாது. லைட் போட மாட்டார்கள் சின்ன சிவப்பு விளக்கு மட்டுமே எரியும். எந்தப் பொருள் எங்கே இருக்கிறது என்று கூட தெரியாது." "இப்படி எல்லாம் சிரமப்பட்டுத் தான் சினிமாவுக்கு வந்தோம். இப்படிச் சிரமப்படுவது பிற்காலத்தில் நன்றாக இருப்பதற்காகத்தான். கதாநாயகன் தமன் வெளிநாட்டில் ஏர்லைன்ஸில் மாதம் 4 லட்ச ரூபாய் சம்பளம் வாங்கியவர். அதையெல்லாம் விட்டுவிட்டுச் சினிமாவுக்கு வந்திருக்கிறார்." "சினிமா அவரைக் கைவிடாது. ஏனென்றால் அவர் சினிமாவை நேசிக்கிறார். சினிமா இரண்டு பேருக்கு வாய்ப்பு கொடுக்கும். தலை சீவ முடியாத அளவிற்கு அடர்த்தியான முடி கொண்டவர்களுக்கும், தலையில் முடியே இல்லாது தலைசீவ வழியில்லாதவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கும்," என்று தெரிவித்தார். இயக்குநர் முருகன் இயக்கி இருக்கும் பார்க் படத்திற்கு அமரா இசையமைக்க, பாண்டியன் குப்பன் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்த படம் குறித்த அடுத்தடுத்த அப்டேட்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கலாம்.

# ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ்: முதல் சுற்றில் இந்திய வீரர் சுமித் நாகல் வெற்றி





ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்வீடனில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல், ஸ்வீடனின் எலியாஸ் ஒய்மெர் ஆகியோர் மோதினர்.

இதில் சுமித் நாகல் 64, 63 என்ற செட் கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

நாளை நடைபெறும் அடுத்த சுற்றில் இந்திய வீரர் சுமித் நாகல் அர்ஜென்டினா வீரர் மரியானோ நவோனுடன் மோத உள்ளார்.

# சர்வதேச கால்பந்தில் இருந்து பிரான்ஸ் வீரர் ஒலிவியர் ஓய்வு



பிரெஞ்சு தேசிய அணிக்காக அதிக கோல் அடித்த கால்பந்தாட்ட ஜாம்பவான் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். யூரோ 2024 பிரான்சுடனான தனது கடைசி போட்டியாக இருக்கும் என்று பிரெஞ்சு ஸ்ட்ரைக்கர் ஒலிவியர் ஜிரூட் ஏற்கனவே கூறியிருந்தார்.

துரதிர்ஷ்டவசமாக, பிரான்ஸ் அணிக்கான தனது கடைசி ஆட்டம் தோல்வியில் முடிந்தது. ஒலிவியர் ஜிரூட் பிரான்ஸ் வரலாற்றில் சிறந்த ஸ்ட்ரைக்கர்களில் ஒருவர். பிரெஞ்சு தேசிய அணியைத் தவிர, ஜிரூட் தற்போது MLS என்ற அமெரிக்க லீக்கில் விளையாடி வருகிறார்.

பிரான்ஸ் அணிக்காக 137 போட்டிகளில் விளையாடி 57 கோல்கள் அடித்து பிரான்ஸின் ஆல் டைம் முன்னணி கோல் அடித்த கால்பந்தாட்ட வீரராக ஜிரோட் உள்ளார்.

பிரான்ஸ் அணியின் முன்னாள் கேப்டன் ஹ்யூகோ லோரிஸ் மற்றும் லிலியன் துராம் ஆகியோருக்குப் பிறகு, ஜிரூட் பிரான்ஸ் அணிக்காக அதிக போட்டிகளில் விளையாடிய மூன்றாவது வீரர் ஆவார்.

தனது ஓய்வு குறித்து அவர் கூறியதாவது:

இந்த பிரெஞ்சு அணியுடன் நான் பணியாற்றிய 13 ஆண்டுகள் என் இதயத்தில் என்றும் மறையாது, இது எனது மிகப்பெரிய பெருமை மற்றும் எனது அன்பான நினைவகம். என்று கூறினார்.

# ரியல் மாட்ரிட் கிளப் அணியில் இணைந்தார் எம்பாப்பே




பிரான்ஸ் நாட்டின் பிரபல கால்பந்து வீரர் கிலியான் எம்பாப்பே. கிளப் போட்டிகளில் கடந்த 2017ம் ஆண்டு முதல் பாரீஸ் செயின்ட்ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) அணிக்காக விளையாடி வந்த எம்பாப்பே, கடந்த ஜூன் மாதத்துடன் முடிவடைந்த லீக்1 சீசனோடு பி.எஸ்.ஜி. அணியில் இருந்து வெளியேறியதாக அறிவித்தார். இதையடுத்து, அவர் ரியல் மாட்ரிட் கால்பந்து கிளப் அணியில் இணைய அதிக வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், பிரான்சின் பிரபல கால்பந்து வீரரான கிலியான் எம்பாப்பே ரியல் மாட்ரிட் கால்பந்து கிளப் அணியில் இணைந்ததாக இன்று அதிகாரப்பூர்வஅறிவிப்புவெளியானது.கிளப்தலைவர்புளோரெண்டினோ பெரெஸ் முன்னிலையில் அவர் அணியில் இணைந்தார்.

ரியல் மாட்ரிட் அணியின் பிரபல வீரரான லூகா மோட்ரிக்கிற்கு 10வது நம்பர் ஜெர்சி எண்ணாக இருப்பதால், எம்பாப்பேவுக்கு 9ம் நம்பர் கொண்ட ஜெர்சி வழங்கப்பட்டுள்ளது.

# ஒற்றையர் பிரிவு தரவரிசை: இந்தியாவின் சுமித் நாகல் முன்னேற்றம்



டென்னிஸ் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியலை டபிள்யு.டி.ஏ. வெளியிட்டது.

இதில் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் கிரெஜ்சிகோவா 32வது இடத்தில் இருந்து 10வது இடத்துக்கு முன்னேறினார். நடந்து முடிந்த பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற இவர், தனது 2வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.


இதற்கு முன் கடந்த ஜனவரி மாதம் வெளியான தரவரிசையில் 'நம்பர்2' இடம் பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டி வரை சென்ற இத்தாலியின் ஜாஸ்மின் பாவ்லினி 7வது இடத்தில் இருந்து முதன்முறையாக 5வது இடத்துக்கு முன்னேறினார்.

போலந்தின் இகா ஸ்வியாடெக், அமெரிக்காவின் கோகோ காப், பெலாரசின் அரினா சபலென்கா, கஜகஸ்தானின் எலினா ரிபாகினா ஆகியோர் முதல் 4 இடங்களில் நீடிக்கின்றனர்.

இதேபோல், ஆண்களுக்கான ஏ.டி.பி. ஒற்றையர் தரவரிசையில் இத்தாலியின் ஜானிக் சின்னர், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், நடப்பு விம்பிள்டன் சாம்பியன் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் முதல் 3 இடங்களை தக்கவைத்துக் கொண்டனர்.

இந்நிலையில், இந்தியாவின் சுமித் நாகல் 73வது இடத்தில் இருந்து 68வது இடத்துக்கு முன்னேறி உள்ளார். சுமித் நாகல் முதல் 70 இடங்களுக்குள் வருவது இது முதல் முறை ஆகும்.



**தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**

**வீயா தடியுறைந் தற்று**

**விளக்கம்:**

**தீய செயல்களைச் செய்தவர் கேட்டை அடைதல், ஒருவனுடைய நிழல் அவனை விடாமல்வந்துஅடியில்தங்கியிருத்தலைப் போன்றது.**

# துலீப் டிராபியில் விளையாட வேண்டும்: டெஸ்ட் வீரர்களுக்கு ஆர்டர் போட்ட பிசிசிஐ



இந்திய கிரிக்கெட் தொடரில் இருந்து நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் இடம் பெறவில்லை என்றால், உள்நாட்டு தொடரில் விளையாடுவதற்காக தங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஜெய்ஷா தெரிவித்தார். ஆனால் ரோகித், விராட் கோலி மற்றும் வேகப் பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா போன்றவர்களுக்கு விதிவிலக்குகள் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

மேலும் வங்காள தேசம் மற்றும் நியூசிலாந்திற்கு எதிரான டெஸ்ட் போட்டிகளுக்கு முன்னோடியாக துலீப் டிராபி பார்க்கப்படுகிறது. அதனால் இந்திய அணியில் இடம் பிடிக்காத மற்ற அனைத்து டெஸ்ட் வீரர்களும் இந்த தொடரில் பங்கேற்க வேண்டும். குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு போட்டியிலாவது விளையாட வேண்டும் என்று பிசிசிஐ விரும்புகிறது.

இது குறித்து பிசிசிஐ வட்டாரங்கள் கூறியதாவது: இந்த முறை துலீப் டிராபிக்கு மண்டலத் தேர்வுக் குழு இல்லை. தேசிய தேர்வுக் குழு மட்டுமே துலீப் அணிகளைத் தேர்ந்தெடுக்கும். அனைத்து டெஸ்ட் அணி வீரர்களும் தேர்வு செய்யப்படுவார்கள். ரோகித், விராட், பும்ரா ஆகியோர் விளையாடுவது அவர்களின் விருப்பம். என கூறுகின்றது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.